**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.932/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | உமாராணி | க-பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 47/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம்செய்து வருகிறேன். எனது கணவர் ஆறுமுகம் கொறட்டியில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் வேலை செய்து வந்தார். தினமும் அவர் இருசக்கர வாகனத்தில்தான் வேலைக்கு சென்றுவந்தார். கடந்த 04.06.2018 அன்று அவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு வரும்போது காரைக்குடி தலைமை தபால் நிலையம் சென்று விட்டு மாலை 5.00 மணியளவில் கழனிவாசல் சாலையில் வந்து கொண்டிருந்தபோது சென்னை செல்லும் தனியார் பேருந்து ஒன்று அவர் மீது மோதி தலை நசுங்கி சம்பவ இடத்தில் இறந்து விட்டதாகவும் மேலும் அவரை 108 ஆம்புலன்ஸ் இல் காரைக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதித்து இருப்பதாகவும் அவருடன் வேலை செய்து வந்த சிவக்குமார் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். நான் மருத்துவமனை சென்று கணவரை பார்த்தபோது அவர் இறந்திருந்தார். மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் ராஜா என்று போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டேன். வழக்கு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு போலீசாரிடம் புகார் அளித்தேன். புகார் அசாஆ 1. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எதுவும் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை கேள்விபட்டுதான் சென்றேன் என்றால் சரிதான். யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் சிவக்குமார். மேற்படி சிவக்குமார் என்பவர் என்னிடம் சொன்ன தகவலைத்தான் முதல் விசாரணையில் நான் சொல்லி இருக்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.25 05:57:03 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி